**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

முன்னிலை : திரு.N.பாரதிராஜன், பி.ஏ., பி.எல்.,

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC), பொள்ளாச்சி**

2023 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 19 ஆம் நாள் செவ்வாய்கிழமை

**இ.ம.எண்.03/2023 இன் அ.வ.எண்.217/2023**

ஆனைமலை தாலுக்கா, காளியாபுரம் கிராமம் அஞ்சல், மாட்டேகவுண்டன்கோவில், கதவு எண்.C–60–ல் வசிக்கும் இந்து லேட்.குமாரசாமி அவர்களின் மகன் சுமார் 53 வயதுடைய திரு.K.சொக்கலிங்கம்.

.... மனுதாரர்/ வாதி

/ எதிர் /

1) ஆனைமலை தாலூக்கா, கோட்டூர் மலையாண்டிபட்டினம் கணக்கப்பிள்ளை வீதி, கதவு எண்.1–ல் வசிக்கும் இந்து லேட்.ராமலிங்கம் மனைவி சுமார் 50 வயதுடைய திருமதி.விஜயலட்சுமி.

2) ஆனைமலை தாலூக்கா, கோட்டூர் மலையாண்டிபட்டினம், கணக்கிப்பிள்ளை வீதி, கதவு எண்.1–ல் வசிக்கும் இந்து லேட்.ராமலிங்கம் மகன் சுமார் 26 வயதுடைய திரு.அருண் (எ) கார்த்திக்செல்வன்.

.... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

மனுதாரருக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்ட ஏ அட்டவணை சொத்திற்க பி அட்டவணை சொத்தான பொது வண்டித்தடத்தின் வழியாக சென்று விவசாய காரியங்கள் செய்ய எதிர்மனுதாரரோ, அவரது ஆட்கள் வகையறாக்களோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என இவ்வழக்கு முடியும் வரை ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் நாள் : 20.07.2023.

இம்மனுவானது கடந்த 07.12.2023 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.குமரவேல் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.G.A.அதிபதி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வழக்கறிஞரின் வாதுரையைக் கேட்டும், இதுநாள் வரை எனது கவனமான பரிசீலனையில் இருந்து வரும் வழக்காவணங்களை பரிசீலித்தும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கிடும்...

## இறுதி உத்தரவு

முடிவில், இம்மனு அனுமதிக்கப்பட்டு மனுதாரருக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்ட ஏ அட்டவணை சொத்திற்க பி அட்டவணை சொத்தான பொது வண்டித்தடத்தின் வழியாக சென்று விவசாய காரியங்கள் செய்வதை எதிர்மனுதாரர்களோ, அவர்களது ஆட்கள் வகையறாக்களோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என இவ்வழக்கு முடியும் வரை ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

## சொத்துவிபரம்

**"A" ஷெட்யூல்**

கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், ஆனைமலை உபபதிவு மாவட்டம், ஆனைமலை வட்டம், காளியாபுரம் கிராமம் புலத்தில், பட்டா எண்.2275/க்கு கட்டுப்பட்ட க.ச.935/1B (நெ.காலை பு.ஹெக்டேர் 6.23.5 கடகு பு.ஏ.15.40க்கு தீ.ரூ.17.27 பை. (பழைய புல எண்.க.ச.935/1) இதில்

| | |
|---|---|
| க.ச.935/2 நெ.காலைக்கும் | ... வடக்கு |
| முத்துக்குமார் என்பவருக்கு பாத்தியப்பட்ட பூமிக்கும் | ... கிழக்கு |
| க.ச.962 நெ.காலைக்கும் | ... மேற்கு |
| க.ச.935/1B நெ.காலையில் சின்னச்சாமி ஆறுமுகம் வகையறா பூமிக்கும் | ... தெற்கு |

இதன் மத்தியில் பு.ஏ.2.68 க்கு பு.ஹெ 1.08.5 க்கு தீ.ரூ.3.00 இந்த பூமியும், ஷை பூமிக்கு க.ச.935/1B நெ.காலையில் அமைந்துள்ள துரஸ்து கிணர் மற்றும் கிணற்றடி இடம் 0.15 செண்ட் மற்றும் ஷை கிணற்றுக்கு பொருத்தப்பட்டுள்ள 10 எச்.பி இ.எம்.பி செட் மற்றும் ஷை இ.எம்.பி செட்டுக்குண்டான மின் இணைப்பு எண். 56 (காளியாபுரம் பகிர்மானம்) என்ற மின் இணைப்பிலும், அதன் காப்புத் தொகையிலும், பொதுவில் 1/3 பாத்தியத்தில் பொதுவில் 1/3 பாத்தியமும், ஷை பூமிக்கு பாத்தியப்பட்ட ஷை க.ச.938/1B காலையில் உள்ள மறறுமொரு துரஸ்து கிணர் மற்றும் கிணற்றடி இடம் 0.15 செண்ட் மற்றும் ஷை கிணற்றுக்கு பொருத்தப்பட்டுள்ள 10 எச்.பி இ.எம்.பி செட் மற்றும், ஷை இ.எம்.பி செட்டுக்குண்டான மின் இணைப்பு எண்.85 (காளியாபுரம் பகிர்மானம்) என்ற மின் இணைப்பிலும், அதன் காப்புக்தொகையிலும், பொதுவில் 1/3 பாத்தியத்தில் பொதுவில் 1.3 பாத்தியமும் மற்றும் ஷை பூமியில் அமைந்துள்ள போர்வெல் கிணர் ஒன்றிலும், அதன் மின் இணைப்பிலும், இ.எம்.பி செட்டிலும் 1/3 பங்கு பாத்தியமும் மற்றும் மேற்படி பூமிக்கு கிழமேலாக உள்ள ரோட்டில் வழியாக வந்து கீழ்கண்ட பூமிக்கு விடப்பட்டுள்ள பொது வண்டி தடத்தின் வழியாக எல்லா காலங்களிலும் ஆட்கள், கால்நடை மற்றும் அனைத்து வாகனங்களும் போகவர உண்டான பாத்தியங்களும் மேற்படி பூமிக்கு பதிக்கப்பட்டுள்ள பைப்லைன்களின் மூலமாக தண்ணீர் பாசனம் செய்து கொள்ளும் பாத்தியங்களும் மற்றும் மேற்படி பூமிக்கு மூல ஆவணங்களின்படி உண்டான அனைத்து பாத்தியங்களும் சகிதம்.

**"B" ஷெட்யூல்**

கோயம்புத்துர் பதிவு மாவட்டம், ஆனைமலை உபபதிவு மாவட்டம், ஆனைமலை வட்டம், காளியாபுரம் கிராமம் புலத்தில், பட்டா எண்.2275 க்கு கட்டப்பட்ட க.ச.935/1B நெம்பர் பூமிக்கு செல்ல கிழமேலாக உள்ள ரோட்டின் வழியாக வந்து கீழ்கண்ட பூமிக்கு விடப்பட்டுள்ள பொதுவண்டித்தடத்தின் வழியாக எல்லாக் காலங்களிலும் ஆட்கள் கால்நடை மற்றும் அனைத்து

வாகனங்களும் போகவர உண்டான பாத்தியங்களும் சகிதம். தாவா மாதிரி வரைபடத்தில் கண்டவாறு.

இவ்வுத்தரவு 2023ம் வருடம் டிசம்பர் திங்கள் 19ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

**(ஒப்பம்)/- N. பாரதிராஜன்**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
பொள்ளாச்சி.

-----------------------------------------------------

**இறுதி உத்தரவு**
ஐ.ஏ.03/2023 இன் ஓ.எஸ்.217/2023
நாள் : 19.12.2023
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
பொள்ளாச்சி.

-----------------------------------------------------